தமிழ் நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1973 நவம்பர் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினர்கள், திருவாளர்கள் என். பி. எம். சின்னையாக் கவுண்டர், கே. அப்பாவுப் பிள்ளை, அல்லாடி ஆரோன் ராவ், ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, டி. எல். சசிவர்ணத் தேவர், பெரியகருப்பன் அம்பலம், தர்மலிங்க நாயக்கர் ஆகியோர் மறைவு குறித்தும், இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. பர்க்கத்துல்லா கான் மறைவு குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மணப்பாறை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. என். பி. எம். சின்னையாக் கவுண்டர் அவர்கள் 13--8--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

ஹோசூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. கே. அப்பாவுப் பிள்ளை அவர்கள் 1--10--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

குண்டூர் மற்றும் நெல்லூர் இந்திய கிறிஸ்துவர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1946-ம் ஆண்டு முதல் 1952-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. அல்லாடி ஆரோன் ராவ் அவர்கள் 17—10—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை எதிர்க்கோட்டை தொகுதியிலிருந்தும், 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை ஸ்ரீவில்லிபுத்தூர் பொதுத் தொகுதியிலிருந்தும், 1962-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை இராசபாளையம் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தவரும், 21--4--1968-ம் நாள் முதல் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்தவருமான திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 30--10--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1967-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் அவர்கள் 7—11—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

மேலூர் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. பெரியகருப்பன் அம்பலம் அவர்கள் 9--11--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

செய்யார் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினராக இருந்த திரு. தர்மலிங்க நாயக்கர் அவர்கள் 15—11—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு நான் இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

மேலும், இராஜஸ்தான் மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த திரு. பர்க்கத் துல்லா கான் அவர்கள் 11--10--1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும் இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அவரது குடும்பத்தின ருக்கு இப்பேரவையின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

கடவுளர் சிலை திருட்டுகள்

* 149 வினா—திரு. அ. தேவேந்திரன் :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவில் சிலைகள் களவாடப்படுவதைத் தடுப்பதற்கென காவல் துறையில் தனியாக ஒரு பிரிவு அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?